[1983 பிப்ரவரி 14

விருத்தாசலம் வட்டத்தில் பாசனக் கிணறுகளை ஆழப்படுத்த வழங்கப்படும் கடன் தொகை.

*வினா எண். 265—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் வட்டத்தில் விவசாயிகள் பாசனக்கிணறுகளை ஆழப்படுத்திக்கொள்ள அரசு அனுமதித்து பாதி பணம் வழங்கப்பட்டு ஆழப்படுத்தும் பணியினை முடித்து பாக்கி தொகைக்காக அரசை அணுகியபோது வட்ட ஆட்சியாளரால் தொகை வழங்கப்பட மாட்டாது என்று தெரிவிப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் பணியினை முடித்த விவசாயிகளுக்கு பாக்கித் தொகையை வழங்க உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ மற்றும் ஆ) வறட்சி நிவாரணப் பணி திட்டத்தின் கீழ் தனியார் பாசனக் கிணறுகளை ஆழப்படுத்திக்கொள்வதற்கு தென்னாற்காடு மாவட்டம் விருத்தாசலம் வட்டத்தில் 266 பேர்களுக்கு கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. ரூ. 3.91 ஆயிரம் முதல் தவணையாக கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது தவணையாக 53 பேர்களுக்கு ரூ. 53,000 கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே வறட்சியின்போது தனியார் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக அரசாங்கம் கடன் வழங்கும் என்று கிராமங்களிலே எல்லாம் டாம் டாம் மூலமாக அறிவிக்கப்பட்டது. விருத்தாசலத்தில் மட்டுமல்ல, தமிழகத்திலே பல்வேறு இடங்களில் ஆயிரக்கணக்கானவர்கள் இந்தக் கடனுக்காக விண்ணப்பம் செய்தார்கள். அவர்களுக்கு முதல் தவணை கொடுக்கப்பட்டது. அவர்கள் கிணற்றை ஆழப்படுத்தி விட்டு மேலும் கிணற்றை ஆழப்படுத்த இரண்டாவது தவணை கேட்கின்றபோது பணம் இல்லை என்று சொல்லி மறுத்துவிட்டார்கள். எனவே அவர்களுக்கு எல்லாம் அரசாங்கம் 2வது தவணை கொடுக்க நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே. 1981—ஆம் ஆண்டு வறட்சி நிலவியபோது விவசாயிகளுக்கு தனியார் கிணறுகளை ஆழப்படுத்தவேண்டுமென்று தக்காவிக் கடன் கொடுக்கப்பட்டது. ஒரு தவணையில் கொடுக்காமல் 2, 3 தவணைகள் கொடுக்கப்பட்டது. தவணை வாங்கியவர்கள் கிணற்றை ஆழப்படுத்தியிருந்தால், 2வது 3வது தவணை கொடுக்கப்பட்டிருக்கும். அப்படி எங்கேயாவது தவறு ஏற்பட்டிருந்தால் அதை என்னிடத்தில் தெரிவித்தால், அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

1983 பிப்ரவரி 14]

திரு. வேடசந்தூர் வி. பி.பாலசுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தக்காவிக் கடன் என்று கிணற்றை ஆழப் படுத்துவதற்காக அரசு கடன் கொடுக்கிறபோதும், மற்ற நிலவள வங்கிகள் மூலமாக கடன் கொடுக்கிறபோதும், 300 மீட்டர்க்கு இடையில் இருந்தால் அந்தக் கடன் இல்லை என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். அந்த விதியை மாற்றாததால் பக்கத்திலே இருக்கின்ற வசதியானவர்கள் கிணற்றை வெட்டுகிறார்கள். அரசு கடனை எதிர்பார்க்கின்றார்கள் இந்த விதியின் காரணமாக தங்கள் கிணற்றை ஆழப்படுத்த முடியவில்லை. எனவே வறட்சியை கருத்தில் கொண்டு அரசு இந்த விதியை தளர்த்தி நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண காலங்களில் கடன் பெறும்போதுதான் அதற்கு முன்னாலே அவர்கள் நிலவள வங்கியிலே கடன் வாங்கியிருந்தால் அந்தக் கடனைப் பெற்று, அந்தக் கடனைச் செலுத்தாதவர்களுக்கு கடன் கொடுப்பது மறுக்கப்படுகிறது. வறட்சி நிவாரணக் காலத்தில் தக்காவிக் கடனாக இருந்தாலும் சரி, நிலவள வங்கிக் கடனாக இருந்தாலும் சரி, விதியை தளர்த்திக் கொடுக்கப்படுகிறது. இப்போதுகூட வறட்சியாலே, நிலவள வங்கிகளில் குறிப்பாக இந்த விதியை தளர்த்தி $1\frac{1}{2}$ கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள்.

தேனிவால்கரடு பகுதியில் ஆதிதிராவிட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம்

*வினா எண். 266—திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனிவால்கரடு பகுதியில் அரிசனங்களுக்கு ஒதுக்கப் பட்ட இடத்தில் மற்றவர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ; பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா பெறுவதற்குத் தகுதியற்ற அனைத்து ஆக்கிரமிப்புதார்களையும் காலி செய்யுமாறு, தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. வீடற்ற தகுதி பெற்ற ஆதி திராவிடர் களுக்கு மட்டும் நிலப்பட்டா கொடுக்கப்படும்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, தேனி பகுதியில் அரிஜனங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் மற்ற வர்கள் ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறார்களா என்பது கேள்வி. அமைச்சர் அவர்கள் புறம்போக்கு நிலங்கள் அத்தனையும்